## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இன்டிபென்டன் டெலிவிசன் நெட்வேர்க் லிமிடெட்டின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 61 ஆவது பந்தியின் படி, ஏற்கனவே இருக்கும் பொறுப்புகள் நடைமுறை அல்லாத பொறுப்புகள் மற்றும் நடைமுறைப் பொறுப்புகள் என வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் | அடுத்த ஆண்டில் தனியாக சமர்ப்பிக்க குறிப்பு வைப்பட்டுள்ளது. . | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புகளாக வகைப்படுத்தி, நிதிக் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட வேண்டும் என்றாலும், அதற்கு அப்பால் றொரங்டன் காணிக்காக அடுத்த வரும் 8 ஆண்டுகளுள் செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள குத்தகை வாடகை பெறுமதிக்குள் உள்ளடக்கப்படாத ரூபா 39,672,000 நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் அளவு, நடைமுறைப் பொறுப்பின் கீழேயே குறிப்பிட்டு இருத்தல். | | கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும். . |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 69 இன் படி நடைமுறைப் பொறுப்பாக அங்கீகரிப்பதற்கான அளவுகோல்களுக்கு மாறாக, சுயாதீன தொலைக்காட்சி சேவை நிதிக் கூற்று அறிக்கையில் வர்த்தக செலுத்தத்தக்கவைகளின் கீழ் நடைமுறைப் பொறுப்பாக ரூபா 87,111,773 கடனாளிகளின் கடன் நிலுவைகளை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பெறுமதிக்குள் ரூபா 29,204,157 கடனாளி வரவு என பிழையான கடனாளி மற்றும் ஒப்பந்த இலக்கங்களுக்கு வரவுவைத்தல், கடனாளிகளின் அதிகப்படியான பணம் செலுத்துதல் மற்றும் நாணயமாற்று விகிதங்களில் வித்தியாசங்கள் காரணமாக ஏற்பட்டு இருந்ததுடன் இவை கணக்குகளிலிருந்து அடையாளம் காணப்பட்டு தீர்க்கப்படாததால், கடன் வழங்குபவரின் பெறுமதி அந்தத் தொகையால் அதிகமாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. | நாணய மாற்று விகிதங்களின் அதிகரிப்பு காரணமாக ஏற்பட்ட வித்தியாசங்கள், பெறத்தக்க மற்றும் செலுத்த வேண்டிய இருப்பாக ஒரே கணக்கு இலக்கம் காட்டப்பட்டிருப்பது, கணக்கு தவறாக உள்ளிடப்பட்டிருப்பது, அதிக பணம் பெறப்பட்டிருப்பது, எத்பவுரு திட்டத்திற்கு நிறுவனம் பணம் செலுத்தியது போன்றவை இந்த இருப்பில் காட்டப்பட்டுள்ளன, மேலும் இந்த ஆண்டு கணக்குகளிலிருந்து இந்தத் தொகையை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், மற்றும் 2015 ஜனாதிபதி த் தேர்தலுக்காக ஒளிபரப்பப்படாத விளம்பரங்கள் அகற்றப்பட்டபோது மீதமுள்ள ரூபா மில்லியன் 12 அடுத்தடுத்த சட்ட நடவடிக்கைகள் காரணமாக வெளியிடப்படவில்லை என்பதாகவும், செலுத்த வேண்டிய மீதிகளாக காட்டப்பட்டுள்ளது. | சட்ட நடவடிக்கைகள் காரணமாக, தொடர்புடைய பணத்தைத் தவிர்த்து, கடனாளிகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைக் கண்டறிந்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்திகள் 31 முதல் 42 வரையிலான பந்திகளின் படி நிறுவனத்தினால் நிதிக் கூறுக்க்ளில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கருவிகளில் இடர் பகுப்பாய்வு செய்யப்பட்டு, நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | நிலையான வைப்புத் தொகைகள் மட்டுமே நிதிக் கருவிகளாக உள்ளதாகவும், இது தொடர்பான எதிர்கால சந்தை இடர் அடையாளம் காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்புகள் | நியமங்களின் படி நிதிக் கருவிகளின் இடர் பகுப்பாய்வை செய்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மூலம் வெளிப்படுத்தப்படும். | |
| (ஈ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இல.09 இல் 5.5.13 முதல் 5.5.16 வரையிலான எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு (Expected Credit Loss) பந்திகளின் பிரகாரம் நிதிச் சொத்தின் கடன் ஆபத்து ஆரம்ப அடையாளம் காணப்பட்ட தொடக்கம் கணிசமாக அதிகரித்திருந்தால், பாதகமான இழப்புகளுக்கு சரிசெய்தல் செய்யப்பட வேண்டும் என்றாலும் கூட சுயாதீன தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் மொத்த வணிக வரவுகள் பெறுமதியில் 05 வருடங்கள் தாண்டிய பெறுமதி ரூபா 233,444,111 க்கு அத்தகைய சரிசெய்தல்கள் செய்யப்படவில்லை, அது போல், நிறுவனத்தினால் மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தில மீள் வர்த்தக கடனாளிகளுக்கு பெறாக் கடன் ஒதுக்கீடு செய்யும் போது 2013க்கு முன்னர் காணப்பட்ட மொத்த மீள் வர்த்தக கடனாளிகளின் நிலுவைத் தொகைக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2014 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையிலான ரூபா 14,182,382 அறவிட முடியாக் கடன்களுக்கான ஒதுக்கீடு மீளாய்வாண்டில் செய்யப்படவில்லை. | மீள் வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அண்மைய ஆண்டுகளில் கடன்பட்டோருக்காக சேதத்திற்கான ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை என்பதாகவும், ஆபத்தை கவனத்தில் கொண்டு நீண்ட கால கடன்பட்டோருக்கும் சேதத்திற்கான ஏற்பாடு கடந்த ஆண்டுகளைப் போன்று செய்யப்பட்டுள்ளது. | நியமங்களின் படி பாதகமான இழப்புக்களுக்காக மற்றும் மீள்வர்த்தக கடன்பட்டோருக்காக அறவிடமுடியாக் கடன் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும். |
| (உ) | நிதிக் கூற்றுக்களுக்கான விளக்கக் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்ட நிதி சொத்துக்களின் வகைப்பாடு, 2018 ஆண்டில் நடைமுறைக்கு வந்த இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமங்களின் இல.09 இன்படி செய்யப்பட வேண்டும் என்றாலும், நிறுவனம் அவற்றை இலங்கை கணக்கியல் தரநியமங்கள் இல.39 இன்படி வகைப்படுத்தியுள்ளது. | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 09 இன் படி நிதி சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புகள் எதிர்கால பணப்பாய்ச்சல் தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதால், இந்த ஆண்டு சொத்துக்களை மறுமதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்கள் அதற்கேற்ப தயாரிக்கப்படும். | நிதி அறிக்கையிடல் தரநியமங்களின் படி வகைப்படுத்தல் செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 15 இன் படி 119 பந்தி மற்றும் 124 பந்தி பிரகாரம் வாடிக்கையாளர்களுடன் ஏற்படுத்திக் | போதிய ஒரு பதில் வழங்கப்படவில்லை. | நியமங்களின் படி வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளும் ஒப்பந்தங்களிலிருந்து எழும் பொறுப்புக்கள் தொடர்பில் செயலாற்றுகை பொறுப்புக்கள் எவை என்பது பற்றியும் 125 பந்தியின் கடி செயலாற்றுகை பொறுப்பு நிறைவேற்றுதல், அதன் அடிப்படையில் அடையாளம் காணுதல் மற்றும் முக்கிய தீர்ப்புகள் தொடர்பான வெளிப்படுத்தல்களை செய்ய வேண்டும் என்றாலும் கூட, நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் செய்யப்படவில்லை. | | |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 21 இன் படி, 2019 முதல் வசந்தம் ரூபவாஹினி தொலைக்காட்சிக்காக வெளிநாட்டு நாணயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 04 வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்களின் ஒளிபரப்பு அத்தியாயங்களுக்கு மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய US$ 354,950 நிலுவைத் தொகை, அந்தத் திகதியில் நிலுவையில் உள்ள நாணயமாற்று விகிதத்தில் மாற்றப்பட்டு நிதிக் கூற்று அறிக்கைகளில் சமர்ப்பிக்கப்பட வில்லை. இதன் விளைவாக, ஆண்டிற்கான இழப்பு ரூபா 12,213,294 குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்று அறிக்கையில் திரட்டப்பட்ட கணக்கு இருப்பு அந்த பெறுமதியை விட குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும், கூறப்பட்ட தரநியமங்களின் YouTube வருமானத்தைக் கணக்கிடும்போது, அது அந்தத் திகதியில் நாணயமாற்று விகிதத்தில் மாற்றப்பட்டு கணக்கிடப்பட்டிருக்க வேண்டும் என்றாலும், அது அதற்கு முரணாக டொலர் கொள்வனவு செய்யும் விகிதத்தில் மாற்றப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளது. அதுபோல், இந்த வங்கியினால் நேரடியாகக் கழிக்கப்பட்ட ரூபா 360,377 தொகை வங்கிக் கட்டணமாக கணக்கு வைப்பதற்கு பதிலாக நாணயமாற்று இழப்புக்களாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | டொலரின் அசாதாரண அதிகரிப்பு நிறுவனத்தினால் தாங்கிக் கொள்ள கடினமாக இருப்பதால், வெளிநாட்டு தொலைக்காட்சி நாடக வழங்குநர்களிடம் கட்டணக்கழிவுக்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், இன்றளவில் செலுத்த வேண்டிய விகிதம் குறித்து இன்னும் இறுதி ஒப்பந்தம் எட்டப்படவில்லை என்பதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>மேலே ரூபா 360,377 மீதம் வங்கிக் கட்டணங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களின் படி, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் நிலுவையில் உள்ள தொகையை அந்த திகதியில் நிலவும் நாணயமாற்று விகிதத்தில் மாற்றப்பட்டு நிதிக் கூற்று அறிக்கைகளில் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஏ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் படி நிதிக் கூற்று அறிக்கைகளில் தொடர்புடைய தரப்பினர் தொடர்பான | இலங்கை கணக்கியல் தரநியமம் இல.24 இன் படி நிதிக் கூற்று அறிக்கைகளில் | கணக்கீட்டு நியமங்களின் படி தொடர்புடைய |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும் என்றாலும் கூட, நிறுவனத்தினால் பிரதம முகாமைத்துவத்தின் நபர்கள் தொடர்பான தகவல்களை நிதிக் கூற்று அறிக்கைகளின் குறிப்பு இல.30 இன் கீழ் வெளிப்படுத்தப்படவில்லை. . | தொடர்புடைய தரப்பினர் தொடர்பான வெளிப்படுத்தல்களை எதிர்காலத்தில் குறிப்பிடுவதற்கு குறிப்பு வைத்துக் கொள்ளப்பட்டது. | தரப்பினர்கள் பற்றி வெளிப்படுத்தல் செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | நிறுவனத்தின் வழிநடத்தல் விடயங்களுக்கு தொழில்நுட்ப உபகரணங்களின் அதிக பயன்பாடு மற்றும் அதில் ஏற்படும் தொடர்ச்சியான காலாவதியாதல் காரணமாக, இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 36 இன் பந்தி 09 இன் பிரகாரம், ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் சொத்து சேத மதிப்பீட்டை நடாத்தி, நட்டக் கணக்குகளில் அடையாளம் காணப்பட்டு இருக்கவில்லை. | அடுத்த வரும் ஆண்டிற்கான இலங்கை கணக்கியல் தரநியம இல. 36 இன் படி சேத சரிசெய்தல்களைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் படி படி சேத நட்டக் கணக்குகளில் அடையாளம் காண்டு கொள்ள வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | தொலைக்காட்சி நாடகங்கள் 04 தொடர்பிலான மீளாய்வு ஆண்டில் கொள்வனவின் செலவு மற்றும் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,670,000 கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டுள்ள காரணத்தினால் நிறுவனத்தின் லாபம் அந்தத் தொகையால் குறைவாகவும், திரட்டப்பட்ட செலவு அந்தத் தொகையால் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | தொலைக்காட்சி நாடகங்கள் தொடர்பான செய்யப்பட்ட கொடுப்பனவுகள் சீர்செய்தலுக்காக குறிப்பு வைக்கப்பட்டுள்ளது. | தொலைக்காட்சி நாடகங்கள் கொள்வனவின் செலவு மற்றும் செலுத்தப்பட வேண்டிய செலவுகள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல்களை தயாரிக்கும் போது, ஆண்டினுள் மோட்டார் வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள் மற்றும் பிற நடைமுற அல்லாத சொத்துக்களின் விற்பனையில் இருந்து பெறப்பட்ட ரூபா 3,579,874 பணப்பாய்ச்சல்கள் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் அடையாளம் காணப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் இந்த சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் என்பதால், விற்பனையிலிருந்து பெறப்பட்ட முழு லாபமாக அடையாளம் | சரியான பதில் வழங்கப்படவில்லை. | சொத்துக்கள் அகற்றல் நடவடிக்கையால் கிடைத்த பணம் சரியான காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண முடியும் என்றாலும் கூட, காசுப்பாய்ச்சல் தொடர்பான கூற்றில் வரிக்கு முன்னரான தேறிய லபத்திற்கு ரூபா 3,579,874 க்கு பதிலாக ரூபா 2,917,303 மட்டும் அடையாளம் கண்டுள்ளபடியால் ரூபா 662,571 இனால் வழிநடத்தல் செயற்பாடுகள் கீழ் தேறிய பணப்பாய்ச்சல் கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. | | |
| (இ) | மீளாய்வாண்டில் வட்டி வருமான ரூபா 37,882,207 என விரிவான வருமான அறிக்கையில் அடையாளம் காணப்பட்டு இருந்தாலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் வட்டி வருமானம் ரூபா 41,385,242 என அடையாளம் காணப்பட்ட காரணத்தால் வழிநடத்தல் செயற்பாடுகளின் கீழ் தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 3,503,035 தொகை குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது. | வருமானக் கூற்றில் வட்டி வருமானமாக குறிப்பிடப்பட்ட ரூபா 37,882,207 அந்த ஆண்டிற்குரிய வருமானமாகுவதுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் சரிசெய்தலின்போது, அதற்காக ஆரம்ப கிடைக்கத்தக்க வட்டி வருமானம் மற்றும் ஆண்டு இறுதியில் வட்டி வருமானம் சரிசெய்தல்கள் செய்யப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் போது, வழிநடத்தல் லாபத்திற்காக சரிசெய்தல் சரியாக செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் தேறிய காசுப்பாய்ச்சலை கணக்கிடுவதற்கு பணி மூலதன மாற்றங்களை சரிசெய்யும்போது, பிற செலுத்த வேண்டிய தொகைகளில் ஏற்பட்ட குறைவு ரூபா 56,937,978 ஆக இருந்தபோதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 59,982,315 குறிப்பிடப்பட்டு இருத்தல் காரணமாக வழிநடத்தல் செயற்பாடுகளின் கீழ் காசுப்பாய்ச்சல் ரூபா 3,044,337 குறைத்து காட்டப்பட்டுள்ளது. | சரியாக குறித்துக் கொள்ள குறிப்பு வைக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் போது, தகவல்கள் சரியாக குறிப்பிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கடந்த ஆண்டு தொடர்பில் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட விற்பனை நிறைவேற்றுனர் தரகுப் பணம் ரூபா 3,840,289 தொகையால், ஒதுக்கீடு செய்யும் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக, செலவுக் கணக்கில் வரவு வைத்தலும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு உட்பட விற்பனை நிறைவேற்றுனர் தரகு ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா | 2025 ஆண்டில் தொடர்புடைய கால வரையறைகளை அடையாளம் கண்டு, அதன்படி கணக்கு வைப்பதற்கு குறிப்பு வைக்கப்பட்டுள்ளது | விற்பனை நிறைவேற்றுனர் தரகுப் பணம் செலுத்தப்படும் போதும் ஒதுக்கும் போதும் சரியான காலவரையறைகளை அடையாளம் கண்டு, கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 4,041,085 தொகையை மீண்டும் ஒதுக்கப்பட்ட ஒன்றாக கணக்கு வைக்கப்பட்டுள்ள காரணத்தால் ஆண்டின் செலவு மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அந்தத் தொகையால் கூடுதலாக காட்டப்படடிருந்தது. அதுபோல், 2022 ஆம் ஆண்டுக்கு முந்திய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட விற்பனை நிறைவேற்றுனர் தரகு ரூபா 941,262 ஒதுக்குதல் கணக்கில் இருந்து நீக்கும் போது, தடுத்துவைக்கப்பட்ட வருவாய் வரவு வைப்பதற்கு பதிலாக ஆண்டின் செலவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள காரணத்தால் அந்த தொகையால் ஆண்டின் செலவு மற்றும் தடுத்துவைக்கப்பட்ட வருமானம் குறைந்துள்ளன. மேலும், விற்பனை நிறைவேற்றுனர் தரகு கணக்கிடும்போது, 2025 ஆம் ஆண்டின் படடியல் பயன்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் ரூபா 177,022 இனால் மீளாய்வாண்டின் செலவு மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்துள்ளன. | | |
| (ஊ) சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான விரிவான வருமான அறிக்கையில் ரூபா 8,692,022 முகவர் தரகு செலவாக அடையாளம் காணப்பட்டிருந்தாலும் அதற்குள் 2016 முதல் 2023 ஆண்டு வரையான காலம் தொடர்பாக மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டு இருந்த முகவர் தரகு ரூபா 5,601,155 அட்டுறு செலவுக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக நடப்பாண்டில் செலவாகப் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, நடப்பு ஆண்டிற்கான இலாபம் ரூபா 5,601,155 வினால் குறைத்தும் நடைமுறைப் பொறுப்புக்கள் அந்தத் தொகையால் கூடுதலாகவும் கணக்குகளில் குறிப்பிப்படப்பட்டுள்ளது. | 2025 ஆண்டில் தொடர்புடைய காலப் பகுதி அடையாளம் கண்டு கணக்கு வைப்பதற்கு குறிப்பு வைக்கப்பட்டுள்ளது. | விற்பனை நிறைவேற்றுனர் தரகு பணம் செலுத்தப்படும் போதும் ஒதுக்கும் போதும் சரியான காலவரையறைகளை அடையாளம் கண்டு, கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (எ) 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,037,763 தொகை பெறுமதியான ஆங்கிலத் திரைபடங்கள் 12 அருவ சொத்துக்களாகக் கணக்கு வைப்பதற்கு பதிலாக முன்கூட்டியே செலுத்தப்பட்ட கொடுப்பனவாக கணக்கு வைக்கப்பட்டு இருந்தத. இதன் காரணமாக | இந்த திரைப்பட ஒளிபரப்பு ஒப்பந்தங்களின் காலம் காலாவதியாகிவிட்டதாகவும், இது தொடர்பில் கணக்காய்வு முகாமைத்துவக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடி | இந்த திரைப்பட ஒளிபரப்பு இயலுமை தொடர்பில் உறுதிப்படுத்தி பொருத்தமான வகையில் பயன்படுத்துதல் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | அருவ சொத்துக்கள் அந்தத் தொகையால் குறைத்தும் நடைமுறைச் சொத்துக்கள் அந்த தொகையால் அதிகரித்தும் கணக்கு வைக்கப்பட்டுள்ளன. | அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணக்கு வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2023 ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட மீள்வர்த்தக ஒப்பந்தத்தின் 1 இன் 1.1 (ஓ) இன்படி அலைவரிசையை நடாத்திச் செல்லும் வாடகை மற்றும் உயர் வரையறை குறியாக்கல் (HD Encoder) வாடகையாக காலாண்டிற்கு ரூபா 1,500,000 அதாவது வருடத்திற்கு ரூபா 06 மில்லியன் செலுத்த வேண்டிய போதும் அந்த வாடகைச் செலவினம் மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான SLT ஒப்பந்தங்களின்படி அனைத்து அறிவிப்புகளும் பெறப்பட்டிருந்தாலும், கம்பனி இன்னும் அதன் சேவைகளைப் பெற்று வருகின்றமையால் கடித ஆவணங்கள் பெற்றுக் கொண்டு, இந்த ஆண்டில் கணக்குகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்வர்த்தக ஒப்பந்தத்தின் படி அலைவரிசையை நடாத்திச் செல்லும் வாடகை மற்றும் உயர் வரையறை குறியாக்கல் (HD Encoder) வாடகையை கணக்கு வைக்கப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிறுவனத்தின் மொத்த வணிக கடன்பட்டோர் மீதி ரூபா 941,388,050 ஆனதுடன் இதில் ரூபா 369,161,342 அதாவது நூற்றுக்கு 39 வீதம் 01 வருடத்தை விஞ்சிய கடன்பட்டோர் மீதிகள் காணப்பட்டதுடன் அதில் ரூபா 233,444,111 அதாவது நூற்றுக்கு 29 வீதம் 05 வருடங்களை தாண்டிய கடனாளிகள் மீதி காணப்படுவதுடன் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு வரை கூட அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மள்வர்த்தக கடன்பட்டோர் பெறுமதி ரூபா 35,705,603 ஆகுவதுடன் அந்த மீதியில் நூற்றுக்கு 73 வீதமாகும் அதாவது, ரூபா 26,102,280 தொகை 05 வருடங்களை தாண்டிய கடனாளிகள் மீதியாகும் என்பதுடன் அதற்குள் 2023 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட மீள்வர்த்தக ஒப்பந்தத்தின் படி, ரூபா 6,881,600 கடனாளிகள் பெறுமதி காணப்படுவதுடன் அவைகளை அறவிட்டுக் கொள்வதற்கு மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | 2001 ஆம் ஆண்டு முதல் 2023 வரை 22 ஆண்டுகள் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பில் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ள மீதிகள் என்பதாகவும், அந்த மீதிகளை அடையாளம் கண்டு, பகுதி பகுதிகளாக பணிப்பாளர் சபைக்கு அனுப்பி புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், கடன் அறவிட்டுக் கொள்ளும் முறையில் முந்திய காலத்தை விட வலுப்படுத்தப்பட்டுள்ளது. | கடன்பட்டோர் மீதி தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமை பற்றிய அறிக்கையில், வசந்தம் டிவியின் வணிகக் கடனாளிகளின் கீழ் வணிகக் கடனாளிகளின் பெறுமதியை கணக்கிடும் போது, ரூபா 19,721,115 தொகை கடனாளிகள் பற்று மீதி அடையாளம் காணப்படாமல், மொத்த வணிகக் கடனாளிகளிடமிருந்து குறைத்து கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில வணிகக் கடனாளியின் பெறுமதி அந்தத் தொகையால் குறைத்து கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் அது நிதிநிலைமை பற்றிய அறிக்கைகளுக்கான குறிப்பு மூலம் வெளிப்படுத்தப்படவில்லை. | கடன்பட்டோர்களின் கணக்குகளின் வயது பகுப்பாய்வு, காலத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளதாகவும், கடனாளிகளின் இறுதி மீதி தேறிய பெறுமதியாக அங்கு குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஒரு கடனாளியாக அடையாளம் காணப்பட்டாலும், அட்டவணை இலக்கத்தின் படி பல கடனாளிகள் இருப்பதாகவும், கடனாளிகள் தனித்தனியாக ஆராயப்பட்டு, தனிப் பெறுமானம் பெறப்பட்டுள்ளதாகவும், எந்தவொரு கடனாளி மீதியும் குறைவாக குறிப்பிடப்படவில்லை. | கடன்பட்டோர்களின் வரவு மீதிகளை அடையாளம் காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மொத்த கடனாளிகளில் இருந்து குறைத்து குறிப்பிடக்கூடாது. |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| இலங்கை வங்கி, ஹொரிங்டன் மற்றும் பெலவத்தை கிளைகள் நடைமுறைக் கணக்குகளில் பெறப்பட்ட ரூபா 2,653,561 பணம் கிடைத்தமையை அடையாளம் காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல், கடன் வழங்குநர் மீதியாக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பாக வர்த்தக வழங்குநர் மீதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் வர்த்தக வழங்குநர் பெறுமதியில் அந்தத் தொகையால் கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | 2024 ஆம் ஆண்டில் 03க்கு கூடிய இந்த மீதிகள் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமைக் கோரப்படாத மீதிக் கண்குகளில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கை 30/2016 இன் 3.1 பிரிவு | எரிபொருள் பரிசோதனையின் போது வாகனம் நகரத்திற்கு உள்ளேயும் வெளியேயும் 80 கிலோமீற்றர் தூரம் ஓட்ட வேண்டியிருந்தாலும், நிறுவனத்தின் 33 வாகனங்கள் எரிபொருள் எரிப்பு சோதனையின் போது எழுத்துப்பூர்வ அனுமதி இல்லாமல் 100 முதல் 200 கிலோமீற்றர் வரை ஓட்டப்பட்டுள்ளன. | எரிபொருள் பரிசோதனையின் தொடக்கத்தில் நிறுவனத்தின் வேலைத்திட்டங்களுக்காக வாகனங்கள் ஒட்டப்படும் போது, பாசோதனை நடவடிக்கைகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில், மிகவும் பொருத்தமான அளவுகோலாக அதிக கிலோமீற்றர் தூரத்தை ஓட்டிய பின்னர் எரிபொருள் பரிசோதனையை நடத்த தீர்மானிக்கப் பட்டுள்ளது. | எரிபொருள் எரிவு பரிசோதனைகளை மேற்கொள்ளும் போது, சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,114,063 நட்டம் ஏற்பட்டுள்ளதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 213,739,466 ஆகும். அதன்படி, நிதி விளைவில் கடந்த ஆண்டின் நட்டம் ரூபா 200,625,403 இனால் குறைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. இந்த நட்டம் குறைவதற்கு கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டினுள் அலைவரிசை நேர விற்பனை ரூபா 318,344,178 அதாவது நூற்றுக்கு 23 வீதத்தினால் அதிகரித்ததே முக்கிய காரணமாகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குகளின் பகுப்பாய்வு

2022 ஆம் ஆண்டில் ரூபா 1,394,668,739 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் ரூபா 1,385,459,165 ஆகவும் இருந்த அலைவரிசை நேர விற்பனை வருவாய், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா 1,703,803,343 ஆக இருந்தது, இது கடந்த ஆண்டை விட 22 சதவீத அதிகமாகும். பிற வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 215,718,957 ஆகவும், மீளாயவாண்டில் ரூபா 202,635,890 ஆகவும் இருந்தது. இது கடந்த ஆண்டை விட 6 சதவீதம் குறைவாகும். தேறிய நிதி வருமானம் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா 13,091,626 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் ரூபா 70,597,357 ஆகவும் இருந்தது, இது 81 சதவீதம் குறைவாகும். மேலும், நிகழ்ச்சித்திட்டச் செலவுகள், ரூபா 2023 ஆம் ஆண்டில் ரூபா 541,971,692 ஆக இருந்த இந்த தொகை, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா 574,357,625 ஆக இருந்தது, அதாவது நிகழ்ச்சித்திட்டச் செலவுகள் 6 சதவீதம் அதிகரித்திருந்தன. மீளாய்வாண்டில்

சந்தைப்படுத்தல் செலவுகள் ரூபா 62,883,414 ஆகவும், கடந்த ஆண்டில் ரூபா 97,563,953 ஆகவும் இருந்தன, இது கடந்த ஆண்டை விட 36 சதவீதம் குறைந்திருந்தது. 2023 ஆம் ஆண்டில் பிற வழிநடத்தல் மற்றும் நிர்வாகச் செலவுகள் ரூபா 1,268,848,083 ஆகவும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா 1,269,234,400 ஆகவும் இருந்தன, அதாவது கடந்த ஆண்டை விட 0.03 சதவீதம் அதிகமாகும். .

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொக்குவில் ஒளிபரப்பு கூடத்தின் ஒலிபரப்பு நடவடிக்கைகளுக்கான தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் நிறுவனத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு வரை அந்த நிறுவனத்திற்கு மின்சாரத்திற்கான செலுத்த வேண்டிய தொகை ரூபா 25,707,934 செலுத்தவில்லை. 2023 ஏப்ரல் 06 திகதி முதல் கொக்குவில் ஒளிபரப்பு கூடத்தின் ஒளிபரப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதால், கொக்குவில் ஒலிபரப்பு கோபுரம் ஊடாக வசந்தம் டிவி, லக்ஹண்ட மற்றும் வசந்தம் எப்எம் செனல்களின் ஒலிபரப்பு நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டன. மேலும், 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு வரை கொக்குவில் ஒலிபரப்பு கோபுரத்திற்கு நிறுவனம் செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத் தொகை ரூபா 48,750,000 ஆகும். | 2009 ஆம் ஆண்டு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்குக்கு ஒளிபரப்பை விரிவுபடுத்துவதற்காக அரச கொள்கைகளின்படி ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டதாகவும், 2009 முதல் அந்தத் திட்டத்திலிருந்து விற்பனை வருவாய் எதுவும் ஈட்டப்படவில்லை என்றும், இந்தத் திறமையின்மை காரணமாக, ஒளிபரப்பு நடவடிக்கைகளை நிறுத்த நிர்வாகம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் கூறப்பட்டுள்ளது. பல சுற்று விவாதங்களுக்குப் பிறகு, 2009 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ள ரூபா 48,750,000 வரி வாடகையை தள்ளுபடி செய்ய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஒப்புக்கொண்டுள்ளது. | வினைத்திறனற்ற திட்டம் என குறித்த தகவல்களை சமர்ப்பித்து, முறையான அங்கீகாரத்தின் கீழ் கொக்குவில் ஒலிபரப்பு கூடத்தின் ஒளிபரப்பு நடவடிக்கைகள் மற்றும் கொக்குவில் ஒலிபரப்பு கோபுரம் மூலம் மேற்கொள்ளப்படும் ஒலிபரப்பு நடவடிக்கைகள் குறித்து,தீர்மானம் ஒன்று எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தினால் தொலைபேசி நிறுவனங்களுக்கு ஒளிபரப்பு கோபுரங்களை குத்தகைக்கு வழங்கும் போது, தொலைபேசி நிறுவனங்களுடன் கைச்சாத்திட்ட குத்தகை ஒப்பந்தங்கள் 06 இரத்து செய்யப்பட்ட பின்னர், வரவிருக்கும் காலத்திற்கு அந்த ஒப்பந்தங்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | புதிய ஒப்பந்தங்களுக்கு வருவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த அங்கீகாரம் கிடைத்தவுடன் புதிய புதிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்படும். | முறையான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தின் விற்பனைப் பிரிவுக்கான வருவாய் உருவாக்கத்தின் கீழ், ஒளிபரப்பு நேர விற்பனையிலிருந்து ரூபா மில்லியன் 2008 வருமானம் மதிப்பிடப்பட்டது. ஆங்கு ஐடிஎன் டிவி, வசந்தம் டிவி, லக்ஹண்ட மற்றும் வசந்தம் எப்எம் ஆகியவற்றுக்கான 08 முக்கிய செயல்பாடுகள் மூலம் வருவாய் உருவாக்கம் மதிப்பிடப்பட்டிருந்தாலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதிக்குள், செயல்நடவடிக்கை திட்டத்தின் முன்னேற்றத்தின்படி 04 முக்கிய செயல்பாடுகளை மட்டுமே பயன்படுத்தி ரூபா மில்லியன் 2071 வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது, ஆனால் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதி அறிக்கைகளின்படி, வருமானம் ரூபா மில்லியன் 1756 ஆகும். வசந்தம் டிவிக்கான திட்டத்தில் 15 திட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும், 05 திட்டங்கள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளன. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்படாத 24 திட்டங்களுக்கு ரூபா மில்லியன் 17 செலவிடப்பட்டு, அவை வருடத்தில் முடிக்கப்பட்டுள்ளன. | 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் பல்வேறு மற்றும் புதிய திட்டங்களை முன்வைக்க எதிர்பார்க்கப்பட்டாலும், எதிர்பார்த்தபடி உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஏற்ப வர்த்தகத் துறையில் அனுசரணையாளர்களைப் பெறுவதில் உள்ள சிரமம் காரணமாக இதை நிறைவேற்ற முடியவில்லை. | இழப்புகளைக் குறைத்து கொள்வதற்கும், வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அரசாங்க காணிகள் தொடர்பான கோவையின் 217 ஆவது பிரிவின் (2)(VI) (ஆ) உப பிரிவின் படி வணிக நோக்கங்களுக்கான குத்தகைகள் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் திருத்தப்படலாம் என்பதுடன் நிறுவனத்தினால் யடியன்தொட்ட குத்தகைக் காணிக்காக 2007 ஆண்டு முதல் வருடாந்த வரி செலுத்தும் போது இது வரை குத்தகை உரிமையாளர் மூலம் செய்யப்பட்ட வரி திருத்தங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக வரி மதிப்பீட்டு அறிக்கைகளின்படி, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள வரி மற்றும் தண்டப்பணம் வட்டி பெறமதி ரூபா 10,571,760 ஆகும். | 2024 மார்ச 22 ஆம் திகதிக்கு ரூபா 10,571,760 தொகையை செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக ஒரு கலந்துரையாடல் நடத்த நடவடிக்கை எடுப்பதாகவும், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கு வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவையில் உள்ள வரிகள் மற்றும் தண்டப் பணம் வட்டி தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முறையான மற்றும் வினைத்திறனான நடவடிக்கைகளுக்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிக் கூற்று அறிக்கை குறிப்பு இல. 32 இல் வழக்கு இல.51824/MR இற்காக வழங்கப்பட்ட தீர்ப்பின் படி ரூபாய் மில்லியன் ஐம்பது (ரூபா 50,000,000) தொகை கூட்டாக மற்றும்/அல்லது தனித்தனியாக முறைப்பாட்டாளருக்கு அறவிட்டக் கொடுப்பதற்கு வழங்கப்பட்ட தீர்ப்பை ரத்து செய்ய சிவில் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 86(2) இன் கீழ் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இதற்காக கணக்கிவ் ரூபா 2,000,000 மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | 2023.03.21 திகதி கடுவெல மாவட்ட நீதிபதி ஒருதலைப்பட்சமாக பிரதிவாதிகளுக்கு எதிராக முறைப்பாட்டாளருக்கு ஆதரவாக தீர்ப்பளித்துள்ளார். அதன்படி, சிவில் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 86(2) இன் படி, பிரதிவாதி ஒரு மனு மற்றும் சத்தியக் கடதாசி மூலம் தாக்கல் செய்து, விடயங்களை உறுதிப்பத்துவதற்கு 2024.02.09 ஆம் திகதி வழக்கை அழைக்குமாறு கோரியுள்ளார். | நிறுவன விடயங்களில் கவனமாக இருக்க வேண்டும் என்பதுடன் சட்ட விடயங்களில் நீதிமன்ற அழைப்பு மற்றும் உத்தரவுகளைப் பின்பற்ற வேண்டும். |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் பங்கு மூலதனம் ரூபா 3,198,499,721 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் இது ரூபா 489,921,592 ஆகவும் தொடர்ந்து குறைந்து, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அரசாங்க நிதி ஒதுக்கீடுகள் காரணமாக ரூபா 586,757,702 ஆகவும் அதிகரித்துள்ளது. 2016 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை நிறுவனம் தொடர்ந்து இழப்பைச் சந்தித்துள்ளது, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் இழப்பு ரூபா 13,114,063 ஆகும். நிறுவனத்தின் கீழ் உள்ள ஐடிஎன், லக்கண்ட மற்றும் வசந்தம் எப்எம் ஆகியவற்றின் இழப்புகள் முறையே ரூபா 1,930,887 ரூபா 22,626,550 மற்றும் ரூபா 1,858,792 ஆகும். | நிறுவனம் கடந்த ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் நிதி முன்னேற்றம் அடைந்துள்ளது, அதன்படி, 2023 ஆம் ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் வருமானம் சுமார் 20 சதவீதம் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் இழப்பு நிலை ரூபா மல்லியன் 164 ஆகவும், 2024 ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 49 ஆகவும் லாப நிலை காட்டப்பட்டுள்ளது. | பணி மூலதனத்தை அதிகரிக்கவும் பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், நிறுவனத்தினால் நலன்புரிச் சங்கத்திற்காக திரட்டப்பட்ட ரூபா 1,276,123 தொகையில் இருந்து, கடந்த ஆண்டில் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1,000,000 கடன் தொகையை நிறுவனம் கழித்து, மீதித் தொகையை சங்கத்திற்குத் திருப்பி வழங்கியது. இருப்பினும், இங்கு திரட்டப்பட்ட அனுசரணை விளம்பர ஒளிபரப்புவதற்காக | ரூபா 1,276,123 தொடர்பான கொடுக்கல் வாங்கள் நிறுவனத்தால் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கள் என்பதால், அது வருமானத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்பதாகவும், அது கடந்த ஆண்டுகளைப் போலவே இது வருமானத்தில் | அனுசரணை விளம்பர ஒளிபரப்புவதற்காக நிறுவனம் செய்த ஒளிபரப்பு நேரச் செலவைக் கருத்தில் கொள்ள வேண்டும். |

| | |
|---|---|
| நிறுவனம் செய்த ஒளிபரப்பு நேரச் செலவைக் கருத்தில் கொள்ளாமல், திரட்டபட்ட முழுத் தொகையும் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | சேர்க்கப்பட்டு, உரிய வரிகள் செலுத்தப்பட்டு முறையாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் பின்னர், தொடர்புடைய அங்கீகாரம் உரிய முறையில் பெற்ற பின்னர் நலன்புரிச் சங்கத்திற்கு செலுத்தப்பட்டு கணக்கு வைக்கப்படடுள்ளது. |

**3.3 விளைவற்றை அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு நிறுவனத்தால் ரூபா 1,588,500 க்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு Hot Swappable Power Distribution Rack இயந்திரமும், 2010 ஆம் ஆண்டு ரூபா 1,218,274 க்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு Aros Flexus FT-30,30KVA UPS System இயந்திரமும் சுமார் 04 ஆண்டுகளாக செயலிழந்து காணப்பட்டன. | காணப்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தரவு களஞ்சிய இடத்திற்கு தொடர்பான உபகரணங்களை கொள்வனவு செய்தலை ஒத்திவைக்கப்பட்டதாகவும், இன்றளவில் அது நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் இன்னும் முன்மொழியப்பட்ட நிலையில் இருப்பதாகவும், இந்த உபகரணங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதால் அதைப் பயன்படுத்த முடியும் என்றும் கூறப்படுகிறது.<br><br>2010 ஆம் ஆண்டு ரூபா 1,218,274 பெறுமதியுள்ள 30KVA Aros Flexus FT - 30 UPS உபகரணங்கள் தீப்பிடித்து எரிந்தன, அதற்கான காப்பீட்டு இழப்பீடு பெறப்பட்டது, மேலும் கணக்காய்வு திகதி வரை உபகரணங்களை சரிசெய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதாகவும், மேற்கூறிய UPS இயந்திரம் தீப்பிடித்து பழுதுபார்க்க முடியாத நிலையில் இருந்ததால், அதை சரிசெய்வது பொருளாதார இழப்பாக இருக்கும் என்பதால், அதை சரிசெய்யவில்லை. | சொத்துக்கள் உரிய முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |